# இலங்கை தேசிய ஆவணக் காப்பகத்தில் தமிழ் ஆவணங்களின் பரிதாப நிலை!

*(இக் கட்டுரை வெளிநாட்டுப் பத்திரிகையாளர் ஒருவரால் 5.7.1998 அன்று இலங்கையின் பிரபல தமிழ் ஏடான வீரகேசரியில் எழுதப்பட்டது. இலங்கை தமிழ் ஆவணங்கள் எந்த நிலையில் பாதுகாக்கப்பட்டு வருகிறது என்பதையும் இன்று 2012ஆம் ஆண்டில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டிருக்குமா? என்பதையும் வாசகர்களின் சிந்தனைக்கு விட்டுவிட்டு அக்கட்டுரையின் சாராம்சத்தை இங்கு நோக்குவோம்)*

ஒரு இனத்தின் பாரம்பரிய வரலாற்றை, அரசியல் மாற்றங்களை, கலை, கலாச்சாரத்துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களை அறியவேண்டுமானால், அரும் பொருளகத்தையோ, ஆவணக் காப்பகத்தையோ தான் நாடவேண்டும். மக்களின் பழமையான நாகரீகத்தை, சமூக பொருளாதாரக் கட்டமைப்புகளை நாம் ஆராய்ந்து அறிந்து கொள்ள இவை எமக்கு உதவியாக அமைந்துள்ளன. உலகில் அனைத்து நாடுகளும் தத்தமது நாடுகளின் அரும் பொருளகத்தை, ஆவணக் காப்பகத்தை தமது தேசியச் செல்வமாக மதித்துப் போற்றி வருகின்றன. இது ஒரு பொதுவான உலகப்பண்பாடாகக் கொள்ளப்பட்டு வருகின்றன. அறிஞர்களின் முக்கிய கையெழுத்துப் பிரதிகள், அரச ஊடகங்கள் அவ்வப்பொது வெளியிடும் அரச வெளியீடுகள், ஓலைச்சுவடிகள், பத்திரிகைகள், புத்தகங்கள், எல்லாம் பையிண்ட் செய்யப்பட்டு அவை அழியும் முன் மைக்ரோ பிலிம் செய்யப்படுவது உலக ஆவணக் காப்பகங்களின் பணி. இந்த தேசியப்பணியில் இன, மத, மொழி வேறுபாடுகள் கவனிக்கப் படுவதில்லை. எனவேதான் இவை "தேசியக்காப்பகங்கள்" என அழைக்கப்பட்டு வருகின்றன. இலங்கை தேசிய ஆவணக் காப்பகம் பிரிட்டீசார் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அவர்கள் எவ்வித பாகுபாடுமற்ற முறையில் மன்னன் சங்கிலியன் காலத்துக்கு முன்பும் பின்புமான நூல்களைத் திரட்டி வைத்துள்ளனர். அறிஞர்கள் பலர் இந்த ஆவணக் காப்பகத்தைத் தமது ஆய்வுக் களமாக்கி அரிய பெரிய தகவல்களையெல்லாம் ஆய்வுசெய்து வெளிக் கொணர்ந்தனர். ஆனால் இலங்கை ஆவணக் காப்பகமோ தன் "தேசிய"த் தன்மையை இழந்து, பல வருடங்களாக, ஒரு இனத்துக்கே முக்கியத்துவம் தந்து ஓரினச் சார்பாக நடந்து வந்துள்ளதை நாம் நன்கு அவதானிக்க முடியும்.

அண்மையில் நான் ஒரு அவுஸ்திரேலியா சிட்னி பல்கலைக்கழக ஆய்வாளருடன் இலங்கைத் தேசிய ஆவணக் காப்பகத்தை நாடிய போது கேட்பார், கவனிப்பாரின்றி தமிழ் ஆவணங்கள் அழிவு நிலையில் கிடப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தேன். அள்ளிக் குவிக்கப்பட்ட நிலையில் கிடந்த நூல்களைக் கண்டு கண்கள் கலங்கின. இன்றைய தமிழ் சமூகத்தைத் தாக்கிய பேரழிவு அவர்கள் வரலாற்று நூல்களையும் தாக்கி அழித்திருப்பதை உணர முடிந்தது. கறையான் நூல்களை மெதுவாக ஆனால் நிச்சயமாக சாப்பிட்டு அழிப்பது போல தமிழர் அரும்பெரும் செல்வங்கள் படிப்படியாக அழிக்கப்பட்டு ஒதுக்கப்படுவதைக் காணச் சகிக்க முடியவில்லை. அங்கு சேர்த்து வைக்கப்பட்ட சிங்கள, ஆங்கில வெளியீடுகள் நன்கு பையிண்ட் செய்யப்பட்டு, மைக்ரோ பிலிமாக்கப்பட்டுள்ளன. முக்கியமான சிங்கள ஆவணங்கள் 1900 ஆண்டுக்குப்பின்பே வெளிவந்துள்ளன. 1940ல் வெளிவந்த நூல்கள்கூட அழகுற பையிண்ட் செய்யப்பட்டுள்ளன. தமிழ் நூல்கள், ஏடுகள் 100 அல்லது 150 வருடங்களுக்கு முற்பட்டவையெல்லாம் அப்படியே விடப்பட்டுள்ளன. அவை அழியும் நிலையில் இருந்தாலும் அதே மரியாதைதான் கிடைக்கிறது. இலங்கை அரசு தமிழரின் மனித உரிமைகளை நசுக்கி அழித்து வருவது போல் தமிழர் சம்பந்தப்பட்ட பழம்பெரும் சரித்திர வரலாறுகளையும் அழித்து ஒழிப்பதில் மிகத் தீவிரம் காட்டி வருகிறது.

மிகவும் அதிர்ச்சி தரும் தகவல் என்னவென்றால் தமிழ்ப்பகுதிக்குப் பொறுப்பான அதிகாரியோ, நூலகர்களோ இல்லை என்பதுதான். 1962 முதல் 1983 வரை ஒரு தமிழ் மேலதிகாரி இருந்தபடியால் இவர் காலத்தில் நூல்கள், பத்திரிகைகள் கட்டப்பட்டு அவை மைக்ரோ பிலிம் ஆக்கப்பட்டன. இன்று எந்த மேலதிகாரியும் தமிழ்துறைக்கு இல்லை. எனவே தமிழ் அதிகாரியோ நூலகரோ இல்லாத நிலையில் எப்படித் தமிழ்த்துறை செயற்பட முடியும்? தமிழ் ஆய்வாளர்கள், வரலாற்று ஆசிரியர்கள், தமிழ்துறைக்குச் சென்று சில நூல்களைக் கேட்டால், இந்தச் சிங்கள அதிகாரிகள் வேண்டப்படாத நூல்களையே தருகிறார்கள். விரல்விட்டு எண்ணக்கூடிய நூலகர்களுக்கே தமிழ் தெரிகிறது. 1981ல் அழிக்கப்பட்ட யாழ் நூலகம் ஆசியாவிலே ஒரு முன்மாதிரியான நூலகமான திகழ்ந்தது. அறிவு வளர்ச்சியில் பாலைவனமாக்கப்பட்ட இந்த நிலை தொடராமல் தடுக்க தமிழ்க்கல்விமான்கள், அறிஞர்கள் அரசு சார்பற்றி நிறுவனர்கள் கொழும்பு ஆவணக் காப்பகத்தைக் காப்பாற்ற வழிகாண வேண்டும் என பிரார்த்திக்கிறேன்!